# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

# மக்கள் சாசனம்
# 2015

©
தமிழ்நாடு அரசு
2015

# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத் துறை
# மக்கள் சாசனம்

## 1.0. முன்னுரை

மாநிலத்தின் நீர்வளத்தை செவ்வனே சேகரித்து, தேக்கி வைத்து, உரிய முறையில் பயன்படுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. வேளாண்மை, தொழில் வளர்ச்சி, வீட்டு உபயோகங்கள் போன்றவற்றிற்கு நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு அரசு சிறப்பு உந்துதலை அளிக்கிறது. பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதாரத்துறை அணைகள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், தடுப்பணைகள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஆகியவற்றினை கட்டுமானம் செய்தல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

## 1.1. நீர்வள ஆதாரத் துறையின் குறிக்கோள்

மாநிலத்தில் பெரிய, நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்களை உருவாக்கிச் செயலாக்குதல் மற்றும் அனைத்து அணைகளையும் பராமரித்தல் நீர்வள ஆதாரத் துறையின் குறிக்கோள் ஆகும். மேலும், இத்துறை மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்வளங்களின் திறன்மிகு மேலாண்மையை உறுதிசெய்யும் பொருட்டு பாசன அமைப்புகளை இயக்கி பராமரித்து வருகிறது. நீரினை பயன்படுத்தும் அனைத்துத் துறைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக, அறிவியல் முறையில் நீரின் மிதமப் பயனீட்டை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது.

## 1. 2. தமிழ்நாட்டின் பாசன விவரங்கள்

தமிழ்நாட்டின் புவியியல் பரப்பு **130** இலட்சம் எக்டேராகும். தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலங்களின் நிகர பரப்பு (**2012–13**) சுமார் **45.44** இலட்சம் எக்டேர். இதில், சுமார் **26.42** இலட்சம் எக்டேர் பரப்பு நிலங்கள் கீழ்க்கண்ட ஆதாரங்கள் வாயிலாக பாசன வசதி பெறுகின்றன:

| | |
|---|---|
| 1. கால்வாய்கள் | – **5.90** இலட்சம் எக்டேர் |
| 2. ஏரிகள் | – **4.20** இலட்சம் எக்டேர் |
| 3. கிணறுகள், குழாய்க் கிணறுகள் | – **16.26** இலட்சம் எக்டேர் |
| 4. பிற ஆதாரங்கள் | – **0.06** இலட்சம் எக்டேர் |

## 2.0. துறையின் அமைப்பு

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், கட்டடம் ஆகியோர் பொதுப்பணித்துறையின் இரு தொழில்நுட்பத் தலைவர்களாக செயல்படுகின்றனர். தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் துறையின் பணியமைப்பு மற்றும் நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறார். தற்பொழுது, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்கள் தலைமைப் பொறியாளர் (பொது) பதவியையும் வகித்து வருகிறார். பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதாரத் துறை, ஆற்று வடிநில அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. மாநிலமானது, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலைமையேற்கும் தலைமைப் பொறியாளர், அவரது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆற்று வடிநிலங்களின் மேலாளராகச் செயல்படுகிறார். இதைத்தவிர, திட்ட உருவாக்கம், நீர்வள வளர்ச்சித் திட்டங்களின்

செயலாக்கம் மற்றும் மேலாண்மையில் உதவுதல், நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வள விவரங்களை சேகரித்துப் பகிர்தல், இயக்கம் மற்றும் பராமரிப்பு, ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பயிற்சிகள் அளித்தல் போன்ற சிறப்புப் பணிகளை ஆறு தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இரண்டு இயக்குநர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

i. திட்ட உருவாக்கம்

ii. வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

iii. இயக்கம் மற்றும் பராமரிப்பு

iv. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

v. நீர் ஆய்வு நிறுவனம்

vi. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

vii. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை

viii. கொதிகலன்கள் இயக்ககம்

மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளும் தலைமைப்பொறியாளர்களின் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

**அ) மண்டலத் தலைமைப் பொறியாளர்களின் செயல்பாடுகள்**

- மண்டலத்திலுள்ள அனைத்து பாசன அமைப்புகளுக்கும் ஒட்டுமொத்த பொறுப்பாளர்களாவர்;
- வடிநிலங்களுக்கான நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைதல், பணிகளின் முன்னுரிமையைக் கண்டறிதல், போதிய தரக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைபிடித்தல்;
- பாசன கட்டமைப்பு மற்றும் அதன் தொடர்பான அமைப்புகளை முன்னுரிமை அடிப்படையில் பராமரித்தல்;

- அனைத்து பணிகளிலும் போதுமான தரக்கட்டுப்பாட்டு முறையினை செயல்படுத்துதல்;
- சிறந்த சுற்றுச்சூழல், பாசனத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல், பொருளாதார மறுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றை உறுதி செய்தல்;
- புதிய திட்டங்கள் தொடர்பாக விவசாயிகளுடனும், விவசாயிகள் அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

## ஆ) சிறப்புப் பணிகளை மேற்கொள்ளும் தலைமைப் பொறியாளர்களின் செயல்பாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>திட்ட உருவாக்கம்,<br>சென்னை–600 005. | நில அளவை மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு புதிய திட்டங்களை உருவாக்கும் பணிகளை திட்ட உருவாக்க அமைப்பு மேற்கொள்கிறது. தள விவரங்களை சேகரித்து, திட்டப் பணிகளுக்குத் தேவையான அனைத்து கட்டுமான வடிவமைப்புப் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொள்கிறது. திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், மண்டல தலைமைப் பொறியாளர்களால் தயாரிக்கப்படும் பாசனக் கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் பாசன விரிவாக்கம், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டங்களுக்கான மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்து பரிந்துரைக்கும் பணியினையும் இவ்வமைப்பு மேற்கொள்கிறது. |

| | | |
|---|---|---|
| 2. | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை–600 005. | பூண்டியில் அமைந்துள்ள நீரியல் மற்றும் நீர்நிலையியல் ஆய்வு நிறுவனம் இவ்வமைப்பின் கீழ் இயங்கி வருகிறது. திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தில், நீரியல், நீர்நிலையியல் மற்றும் கடலோர கட்டுமானங்கள் சம்பந்தப்பட்ட மாதிரி வடிவமைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இந்நிறுவனம் கடற்கரையோரங்களில் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்கிறது.<br>பொள்ளாச்சியில் அமைந்துள்ள நீர்வடிப்பகுதி மேலாண்மை வாரியக் கோட்டம், தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவு மற்றும் நீர்வடிப் பகுதி மேலாண்மை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவால் குறைந்துள்ள கொள்ளளவினை கண்டறிந்து வருகின்றது. மேலும், இவ்வமைப்பு 13–வது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டப் |

| | | |
|---|---|---|
| | | பணிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டது.<br>மேலும், இவ்வமைப்பு, மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் நீர்நிலைகளை ''செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல்'' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கும் முகமையாக செயல்பட்டு வருகிறது. |
| **3.** | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு,<br>சென்னை–**600 005.** | இவ்வமைப்பு மாநிலத்திலுள்ள அணைகளின் நீர் இருப்பு விவரங்களை சேகரித்து, ஆண்டு முழுவதும் தினசரி நீர் அறிக்கையினை அளித்து வருகிறது. இதற்காக நீர் விவரக் குறிப்பு மையம் **24** மணி நேரமும் ஆண்டு முழுவதும் செயல்பட்டுவருகிறது. இம்மையமானது ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் தேவைப்படும் கூடுதல் அலுவலர்களின் மாற்றுப்பணி சேவையுடன், வெள்ளம் குறித்த தகவல்களையும் சேகரிக்கிறது.<br>இவ்வமைப்பின் கீழ் உள்ள அணைப் பாதுகாப்பு இயக்ககம், மாநிலத்தில் உள்ள அனைத்து அணைகளின் (நீர்வள ஆதாரத்துறை மற்றும் தமிழ்நாடு மின் |

| | | |
|---|---|---|
| | | உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அணைகள்) உறுதித் தன்மை குறித்த அறிக்கைகளை தயாரித்து ஆண்டறிக்கைகளை மத்திய அரசின் மத்திய நீர்க் குழுமத்திற்கு அளிக்கின்றது. பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை இவ்வமைப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது. இப்பணிமனை அணைகளில் உள்ள உள்பாகங்கள், கதவுகள் மற்றும் தூக்கி இறக்கி நிறுத்தும் அமைப்புகள் ஆகியவற்றினை தயாரித்து வழங்கி அவற்றை நிறுவி பரிசோதித்து, செயல்பாட்டிற்கு கொண்டு வருவதுடன் அவற்றை பராமரிக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. |
| **4.** | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை—**600 113.** | இம்மையம், மாநிலத்தின் நிலநீர் இருப்பையும், தரத்தையும் கால வரையறைகளில் அளவிட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் முழு அளவிலான வானிலை குறித்த தகவல் நிலையங்களைப் பராமரித்தல், நீர்த்தாங்கிகளின் வரைபடம் மற்றும் நீர்த்தாங்கிகளை மேலாண்மை செய்தல் மற்றும் நிலத்தடி நீர் கண்காணிப்பு வலைதளங்களைப் பலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| 5. | தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர்வள ஆதாரத் துறை, நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை—600 113. | தமிழ்நாட்டின் அனைத்து ஆற்றுப் படுகைகளில் உள்ள நீர்வள ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக நுண்ணிய அளவில் திட்டமிடுதல், மதிப்பிடுதல் மற்றும் நிர்வகிக்கும் நோக்கத்தோடு நீர் ஆய்வு நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் மேம்படுத்தப்பட்ட தொலையுணர்வு மையம் செயல்பட்டு வருகிறது. |
| 6. | தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர்வள ஆதாரத் துறை, பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி—620 015. | இந்நிலையத்தினால் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பாசன மேலாண்மை, நிலத்தடி நீரை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மை மற்றும் கணிணி தொடர்பான பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், பேரிடர் மேலாண்மை, கடற்கரை நீரியல் மற்றும் கடல் நீர் ஊடுறுவுதலைத் தடுத்தல், அணை பாதுகாப்பு மற்றும் அணை பாதுகாப்பு கருவிகள் அமைத்தல் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த பயிற்சிகள் பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தால் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையம், விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிற்சிக்கான சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்கிறது. |

| | | |
|---|---|---|
| 7. | இயக்குநர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA) தரமணி, சென்னை– 600 113. | இம்முகமை நீர்ப்பங்கீடு, வடிநில நீர்மேம்பாடு பற்றி திட்டமிடுதல் மற்றும் திறன்மிகு நீர்மேலாண்மை அணுகுமுறையை செயல்படுத்துவது பற்றியும் அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறது. |
| 8. | கொதிகலன்கள் இயக்ககம், சேப்பாக்கம், சென்னை–600 005. | கொதிகலன்கள் சட்டம், 1923–இன் படி கொதிகலன்கள் பாதுகாப்பாக இயங்கவும், கொதிகலன்களால் பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாக கொதிகலன்கள் இயக்ககம் செயல்படுகிறது. கொதிகலன்கள், வார்பட பொருட்கள், குழாய்கள் மற்றும் இதர தயாரிப்பு நிறுவனங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் மேற்கண்ட தயாரிப்பு நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு கொதிகலன்கள் இயக்ககம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.<br><br>2011–ஆம் ஆண்டில் வகுத்தமைக்கப்பட்ட கொதிகலன் பணியாளர்கள் விதிகள் மற்றும் கொதிகல இயக்க பொறியாளர்கள் விதிகள் ஆகியவற்றினை நடைமுறைப்படுத்தும் பணியினை |

இவ்வியக்ககம் மேற்கொள்கிறது. இதன் மூலம் அனைத்து தொழிற்சாலைகளிலும் பயன்பாட்டில் உள்ள கொதிகலன்கள் தகுதி பெற்ற கொதிகலன் பணியாளர்கள் மற்றும் கொதிகலன் இயக்க பொறியாளர்களால் இயக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

**இ. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்**

தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்களின் விவரங்கள் **இணைப்பு I**–இல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், பாசனம் தொடர்பான விவரங்களை துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களை அணுகிப் பெறலாம்.

## 3.0. நீர்வள ஆதாரத்துறையின் சேவைகள்

### 3.1. பங்கேற்புப் பாசன மேலாண்மைத் திட்டம்

பங்கேற்புப் பாசன மேலாண்மையில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு விவசாயிகள் அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம், 2000 (தமிழ்நாடு சட்டம் 7/2001) இயற்றப்பட்டு 01.10.2002 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டமானது, நீர்வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நீர்ப் பாசன அமைப்புகளிலும் விவசாயிகள் அமைப்புகளை ஏற்படுத்த கீழ்க்கண்டவாறு வழிவகை செய்கிறது:

1. முதல் நிலையானது நீரினைப் பயன்படுத்துவோர்களைக் கொண்ட ‘‘நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்.’’
2. இரண்டாம் நிலையானது ‘‘பகிர்மானக் குழுக்கள்.’’
3. திட்ட அளவில் ‘‘திட்டக்குழுக்கள்.’’

பங்கேற்புப் பாசன மேலாண்மை திட்டம், விவசாயிகளிடையே பாசன மேலாண்மை மற்றும் பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் அவர்களின் பங்களிப்பையும், ஆக்கப்பூர்வமான மாற்றங்களையும் அளித்துள்ளது.

### 3.2. பராமரிப்புப் பணிகளில் விவசாயிகளின் பங்கு

பாசன அமைப்புகள் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசன அமைப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அணைகள், கால்வாய் அமைப்புகள் மற்றும் முறைசார்ந்த ஏரிகள், பராமரிப்பு மானியத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து இதர பாசன அமைப்புகள் முறைசாரா ஏரிகள், அணைக்கட்டுகள், மானாவாரி ஏரிகள் மற்றும் தண்ணீரைத் திருப்பிவிடும் சிறு கட்டமைப்புகளும் முறைசாரா பாசன அமைப்புகள் என்று வகைப்படுத்தப்பட்டு தனியான ஒட்டுமொத்த மானியத்தின் கீழ் நீர்வள ஆதார அமைப்பினால் பராமரிக்கப்படுகின்றன. இயற்கை இடர்பாடுகளினால் சேதம் ஏற்படும்பொழுதெல்லாம் சிதைந்துபோன கட்டமைப்புகளைச் சீராக்கும்பொருட்டு தனியாக சிறப்பு நிதி கிடைக்குமாறு அரசு வழிவகை செய்கிறது.

வரவு செலவு திட்டத்தில், மேற்கண்ட பராமரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் எந்தெந்த பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயலாக்கலாம் என்பதையும் விவசாயிகளுடன் கலந்து பேசி பிரிவு அலுவலகத்திற்கு பொறுப்பான உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் முடிவு செய்வார். விவசாயிகள் தாமாகவே முன்வந்து, அவர்களுக்குத் தேவையான பராமரிப்புப் பணிகளை செயல்படுத்த முற்பட்டால், அப்பணிகளை இயந்திரங்களின் உதவியோடு அல்லது மனித ஆற்றலோடு பொருளாதார ரீதியில் செயல்படுத்த ஏதுவாக உதவிப்

பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் ஆலோசனை வழங்குவார். வெள்ள காலங்களில் பாசனக் கட்டமைப்புகளைப் பாதுகாக்கும் பொருட்டு, பொதுமக்களின் உதவியுடன் இரவு பகலாக சுற்றுக் காவலுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. நீர்நிலைகளில், தனிப்பட்டோரின் ஆக்கிரமிப்புகளை பொதுமக்கள், குறிப்பாக விவசாயிகளின் ஒத்தழைப்போடு இத்துறை அகற்றி வருகிறது.

**3.3. நீர்வள நிலவளத் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழகத்தில் **2005**–ஆம் ஆண்டு உபவடிநில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசனத்திற்கு நீர் வழங்கும் சேவை மற்றும் வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் எட்டு தொடர்புடைய துறைகளில் உலக வங்கி கடனுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம், ரூ.**2,54,700** இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.**2,82,093** இலட்சம் திருத்திய மதிப்பீட்டில், 1**6.**53 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் **61** உபவடிநிலங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில், சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளின் மூலமாக ஏரி கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல், பாசனக் கால்வாய் அமைப்பினை பழுதுபார்த்து புனரமைத்தல் மூலம் மேம்படுத்துதல் போன்றவை செயலாக்கப்பட்டன.

## 3.4. நீர் வாரச் சந்தை (பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம்)

பாசன மதிப்பீடு மற்றும் செயல் திட்டம், பாசன மேலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நல்லிணக்கம் இருந்தால்தான் பாசன மேலாண்மை பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும் என்கிற அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இவ்வொத்துழைப்பு, ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் செயல்பட்டு, இருக்கின்ற தகவல்களைப் பரிமாறி, அதனடிப்படையில் இணைந்த முடிவுகளை எடுத்தால்தான் நிலைக்கும். ஆகவே, இந்நோக்கத்தை அடைய முறையான எல்லைக்குட்பட்ட உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களால் நீர் வாரச் சந்தை நடத்தப்பட்டு வருகிறது.

## 3.5. தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007

ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர்நிலைகளைப் பயனற்று போகாத நிலையிலிருந்து காப்பது ஒரு முக்கியமானத் தேவையாகும். ஏரிகளும், அதன் கட்டமைப்புகளும் பாதுகாக்கப்பட்டு, அவற்றின் உரிய கொள்ளளவு மீளப்பெறப்படாமல் போகுமேயானால் பயிரிடும் பரப்பு குறைதல், அதனால் உணவு தானிய உற்பத்தி குறைதல், நிலத்தடி நீர் குறைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு போன்றவை ஏற்படும். மாநிலத்தின் ஏரிகளைப் பாதுகாப்பதற்காக, பொது மக்களிடம், குறிப்பாக கிராம மக்களிடம், ஏரிகளை உரிய முறையில் பாதுகாப்பது தொடர்பாக துண்டுப் பிரசுரம் வழங்குதல், சுவரொட்டிகள், பத்திரிக்கைகள் மற்றும் தண்டோரா வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஏரிகளின் எல்லைகளை வரையறுத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், ஏரிகளின் எல்லைகளில் கற்காரை எல்லைக் கற்களைப் பதித்தல் போன்ற பணிகளின் வாயிலாக ஆக்கிரமிப்புகள் தடுக்கப்படுகின்றன.

## 3.6. தகவல் மையங்கள்

செயற் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் ஆகியோரின் அலுவலகங்களில் தகவல் அளிக்குமிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மனுக்கள் பெறப்பட்டு அவற்றிற்கான தகுந்த ஒப்புகையும் கொடுக்கப்படும். மக்களுக்கு உடனடியாக அவற்றின் நிலைபற்றிய தகவல்களும் அளிக்கப்படும்.

## 4.0. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

நீர்வள ஆதாரத்துறையில் ஒப்பந்த முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய வகுப்பில் ஒப்பந்தக்காரர்களைக் கண்காணிப்புப் பொறியாளர் / செயற் பொறியாளர் ஆகியோர் பதிவு செய்து வருகின்றனர்.

## 5.0. பணிகளை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கும் முறை

### 5.1. தமிழ் நாட்டில் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மையை நிலை நாட்டும் சட்டம், 1998

தமிழ் நாட்டில் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மையை நிலைநாட்டும் சட்டம், 1998, தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையால் 1998 ஆம் ஆண்டின் சட்டம் எண் 43 ஆக 11.12.1998 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம், பொதுப் பணிகளில் ஒளிவுமறைவற்ற தன்மையை ஏற்படுத்திடவும், ஓப்பந்தப்புள்ளிகளை கோருதல் மற்றும் ஏற்பது ஆகிய பணிகள் தொடர்பான நடைமுறைகளை வரையறுக்கிறது.

**இச்சட்டத்தின் குறிக்கோள் பின்வருமாறு:–**

- அரசு செயல்படுத்தும் பணிகளில் சிக்கனம் மற்றும் பணித்திறனை அதிகரித்தல்.

- ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க ஒப்பந்ததாரர்களின் ஆர்வம் மற்றும் ஊக்கத்தை அதிகரித்தல்.
- ஒப்பந்ததாரர்களுக்குள் ஒரு வளமான போட்டியை ஏற்படுத்துதல்.
- அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் நேர்மையான மற்றும் சமச்சீர் வாய்ப்பினை ஏற்படுத்துதல், மற்றும்
- ஒப்பந்தப்புள்ளிகளைக் கையாள்வதில் சமநோக்கு மற்றும் நேர்மை ஆகியவற்றை ஏற்படுத்தி மக்களின் நம்பிக்கையைப் பெறுதல். மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான அனைத்து நடைமுறைகளிலும் ஒளிவு மறைவற்ற தன்மையை ஏற்படுத்துதல்.

### 5.2. மின்னணு ஒப்பந்த முறை

தமிழ்நாட்டில் 01.07.2007 முதல் ரூ.10 இலட்சத்திற்கு மிகையான பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலம் இலவசமாக பெற்றுக் கொள்வது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 6.0. நீர்வள ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்தல்

### 6.1. தண்ணீர் எடுப்பதற்கான நடைமுறை

தொழிற்சாலை மற்றும் குடிநீர் தேவைகளுக்கு அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் காலனுக்குக் (mgd) குறைவாகத் தண்ணீர் எடுப்பதற்கு வருவாய்த் துறையின் பரிந்துரையின்பேரில் மாசு கட்டுபாட்டு வாரியத்தின் ஒத்திசைவுடன் அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் காலனும் அதற்கு மேலும் தண்ணீர் எடுப்பதற்கு நீர்ப் பயன்பாட்டுக் குழுவின் ஒப்புதலைப் பெற்று அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

## 7.0. மணல் குவாரி

03.10.2003 முதல் மணல் குவாரி பணிகளை பொதுப்பணித்துறை செயல்படுத்தி வருகிறது. தற்பொழுது மணல் விற்பனை விலை, லாரி லோடு (2 யூனிட்டுகள்) ஒன்றிற்கு ரூ.800/– என விற்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்குத் தங்கு தடையின்றி மணல் கிடைக்க ஏதுவாக புதிய மணல் குவாரிகளை துவக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் ஒப்புதல் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 8.0. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

இச்சட்டத்தின் கீழ் தகவல் அளிப்பதற்காக தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் உள்ளனர்.

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்**

# இணைப்பு – I

## தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் பட்டியல்

| வரிசை எண் | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1. | முதன்மைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை (ம)<br>தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>044–28525351 | 1. இணைத் தலைமைப் பொறியாளர் (பொது)<br>044–28594145<br>2. இணைத் தலைமைப்பொறியாளர் (பாசனம்)<br>044–28594144 |
| 2. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>சென்னை மண்டலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>044–28523007 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>சென்னை மண்டலம்.<br>044–28523007 |
| 3. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>திருச்சி மண்டலம்,<br>புதுக்கோட்டை சாலை,<br>த.பெ.எண்.803,<br>சுப்பிரமணியபுரம்,<br>திருச்சிராப்பள்ளி – 620 020.<br>0431–2332287 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>திருச்சி மண்டலம்.<br>0431–2332287 |
| 4. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>கோயம்புத்தூர் மண்டலம்,<br>கோயம்புத்தூர்–641 001.<br>0422–2381804 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>கோயம்புத்தூர் மண்டலம்.<br>0422–2381803 |

| | | |
|---|---|---|
| 5. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>மதுரை மண்டலம்,<br>தல்லாகுளம், மதுரை–625 002.<br>0452–2530326 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>மதுரை மண்டலம்<br>0452–2530326 |
| 6. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>திட்ட உருவாக்கம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>044–28525662 | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>திட்ட உருவாக்கம்<br>044–28525662 |
| 7. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>044–28413381 | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்<br>044–28413381 |
| 8. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>044–28517261 | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு<br>044–28415552 |
| 9. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி,<br>சென்னை–600 113.<br>044–22541526 | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்<br>044–22541369 |

| | | |
|---|---|---|
| 10. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>நீர் ஆய்வு நிறுவனம்,<br>தரமணி, சென்னை–600 113.<br>044–22542380 | இணை இயக்குநர்,<br>நீர் ஆய்வு நிறுவனம்<br>044–22542674 |
| 11. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், துவாக்குடி,<br>திருச்சிராப்பள்ளி – 620 015.<br>0431–2500500 | இணை இயக்குநர்,<br>பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்<br>0431–2500603 |
| 12. | இயக்குநர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை,<br>தரமணி, சென்னை – 600 113.<br>044–22540135 | செயற்பொறியாளர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)<br>044–22540135 |
| 13. | இயக்குநர்,<br>கொதிகலன்கள் இயக்ககம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005.<br>044–28522233 | துணை இயக்குநர்<br>கொதிகலன்கள் இயக்ககம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005.<br>044–28522233 |